புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# இராமயணத் தோல் பாவைக் கூத்தும்,சமூகம் சார் உளக் கருத்துகளும்

சிந்தியா.தி
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்)
சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் இரா.ஜெயஶ்ரீ
ஆய்வு நெறியாளர்
உதவிப் பேராசிரியர்
சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

*"திரைக்கு முன்னால் பார்ப்பது திரைப்படக் கூத்து;*
*திரைக்குப் பின்னால் பார்ப்பது தோல்பாவைக் கூத்து"*

*தோல்பாவைக் கூத்து:*

*தமிழகத்தில் புகழ்பெற்ற கலைகளில் ஒன்று தோல்பாவைக் கூத்தாகும். பதப்படுத்தப்பட்ட ஆட்டுத் தோல் அல்லது மான் தோலில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களை விளக்கின் மூலம் சிலையில் நிழலைக் காண்பிப்பார்கள். கூத்து, நிழலாட்டம், தோல் பொம்மலாட்டம் என பல்வேறு பெயர்களின் அழைக்கப்படுகின்றது. பொம்மலாட்டம் ,தெருக்கூத்து உள்ளிட்ட பல கலைகளுக்கு தோல்பாவைக் கூத்து தான் தாய் என சிலர் குறிப்பிடுகிறார்கள்.*

*சங்க நூல்களிலும் இந்தக் கலை குறித்து*
*சில குறிப்புகள் உள்ளன சரபோஜி மன்னர்கள் காலத்தில் இந்த கலை பிரபலமாக இருந்தது எளிய மக்கள் மத்தியில் இராமாயணம்,மகாபாரதம் உள்ளிட்ட புராணங்களை தோல்பாவைக் கூத்து வழியாக மக்களுக்குக் கொண்டு சென்றனர் தமிழ்நாடு,ஆந்திரா,கேரளா,கர்நாடகா,ஒரிசா மாநிலங்களில் இந்தக் கலை பல இடங்களில் நிகழ்த்தப்படுகின்றது. தமிழகத்தில் மதுரை, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சுமார் 600 கூத்துக் கலைஞர்கள் குடும்பங்கள் வாழ்கின்றன. முன்பு களைகட்டி நடந்து கொண்டிருந்த தோல்பாவைக் கூத்து சினிமா தொலைக்காட்சி ஆகியவற்றின் ஆதிக்கத்தால் மங்கிப் போய் உள்ளது.. வருமானம் இல்லாத நிலையிலும் பரம்பரை பெருமையை காப்பாற்ற இக்கலைஞர்கள் இந்த கலையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். தற்போது சுற்றுச்சூழல் மற்றும் சமூக விழிப்புணர்வு செய்திகளை கிராம மக்கள் மத்தியில் தோல்பாவைக் கூத்து மூலம் விளக்குகின்றன.*

*தோல்பாவைக் கூத்து என்பது கையுறை பாவைக்கூத்து, பொம்மலாட்டம் என்பவனாக மாற்றம் பெற்றுள்ளது. உயிரற்ற பாவைகளை உயிருள்ள பாத்திரம் மூலமாக நிகழ்த்தப்படும் ஒரு கூத்து.*

*தோல்பாவைக் கூத்து இராமாயணத்தை நிகழ்த்திக் காட்டுவதற்குரிய சிறந்த கலையாகக் கருதப்படுகிறது. இராமாயணம் பத்து பகுதிகளாக நிகழ்த்தப்படுகிறது.*

- *முதல் நாள் பாலகாண்டக் கதை நிகழும். இதில் இராமனின் பிறப்பு, தாடகை வதம், மிதிலைக்குப் புறப்படுதல், அகலிகை சாப விமோசனம் ஆகியவை இடம்பெறும்.*
- *இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மிதிலையில் வில்லொடித்தல், சீதையை மணம் செய்தல், பரசுராமனை வெல்லுதல் ஆகியன நிகழும்.*

- மூன்றாம் நாள் நிகழ்ச்சி பரதனின் பட்டாபிஷேகம். இதில் இராமன் வனவாசம் செல்லுதல், பரதன் இராமனிடம் பாதுகைகளைப் பெற்றுச் செல்லுதல் இடம்பெறும்.
- நான்காம் நாள் சூர்ப்பனகை கௌரவபங்கம் நிகழ்ச்சியில் சூர்ப்பனகையின் மூக்கறுத்தல், கரதூஷணப் போர் நிகழும்.
- ஐந்தாம் நாள் நிகழ்ச்சி சீதை சிறைப்படல். இதில் சீதையை இராவணன் சிறையெடுத்துச் செல்லுதல், ஜடாயு போர், வதை, சபரி மோட்சம், இராமன் ஆற்றில் அனுமனைச் சந்திக்கும் நிகழ்ச்சி இடம்பெறும்.
- ஆறாம் நாள் நிகழ்ச்சி வாலிமோட்சம். இதில் வாலி சுக்கிரீவன் சண்டை, வாலியின் முந்தைய பிறவியை இராமன் அறிவித்தல், வாலியை வதம் செய்தல், சுக்கிரீவன் பட்டாபிஷேகம் இடம்பெறும்.
- ஏழாம் நாள் நிகழ்ச்சியில் சுந்தர காண்டம் இடம்பெறும். இதில் அனுமன் சீதையைத் தேடுவதும், சீதையிடம் பேசுவதும் நிகழும்.
- எட்டாம் நாள் நிகழ்ச்சியில் முதல் நாள் போர் நடக்கும். இதில் சேது பந்தனம், விபீஷணன் அடைக்கலம், இராமன் அனுமனுடன் போர் செய்தல், அங்கதன் தூது ஆகியன நிகழும்.
- ஒன்பதாம் நாள் நிகழ்ச்சியில் கும்பகர்ணன் போர் நடைபெறும். இதில் அதிகாயன் வதை, கும்பகர்ணன் வதை, இந்திரஜித்து போர் இடம்பெறும்.
- பத்தாம் நாள் நிகழ்ச்சி இராவணன் வதையும்,இ ராமன் பட்டாபிஷேகத்துடன் நிறைவு பெறும்.

கும்பகர்ண யுத்த நிகழ்ச்சி முடிந்த மறுநாள் மயில் இராவணன் கதை, மச்சவல்லபன் போர் ஆகிய கதைகள் மூன்று நாட்களுக்கு நிகழும். பட்டாபிஷேகம் முடிந்த பின் அசுவமேதயாக நிகழ்ச்சி நடைபெறும். மொத்தம் இராமாயணக் கதை பதின்மூன்று நிகழ்ச்சிகளாக 11 முதல் 15 நாட்கள் வரை நடைபெறும். இதில் உத்தேசமாக 189 காட்சிகள் இடம்பெற்றிருக்கும்.

தோல் பாவைக் கூத்து - மண்ணின் கலை :

உலகளாவிய தமிழ்ப் பண்பாட்டின் வேர்களையும்,விழுதுகளையும் கண்டறிவது இன்றைய தமிழர்களின் தேவையாகும்.

கேரளாவில் கம்பராமாயணம் எனவும் கர்நாடகா,ஆந்திராவில் இரங்கநாத இராமாயணம் எனவும் அழைக்கப்படும் இத்தோல் பாவைக் கூத்து அடிப்படையில் சிற்சில மாற்றங்களோடு வழிவழியாக நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வாய்மொழியாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 15 நாட்கள் தொடர் நிகழ்ச்சியாக பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

தோல்பாவைக் கூத்து வழியாக அறியப்படும் மக்களின் பண்பாடுகள்:

தோல்பாவைக் கூத்து மக்களின் நம்பிக்கைகளையும் கலாச்சாரத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் கலைகள் வாயிலாக மீட்டுருவாக்கம் செய்து அறவழியில் நடக்கப் பெரிதும் துணை புரிகின்றது. மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துக் கூறுவது. அதாவது படிக்காத பாமர மக்களுக்கு அறச்செய்திகளை கலைகள் வாயிலாகக் கொண்டு சேர்ப்பது. கலைகள் மூலம் மக்கள் தன் வாழ்க்கையில் நன்மை தீமைகளை பிரித்துப் பார்ப்பது அதனைத் தன் வாழ்க்கையோடு ஒன்றிணைத்துப் பார்க்கின்றனர். முன்னோர்கள் கடைபிடித்த சடங்குகள் ,சாஸ்திரங்கள் கலாச்சாரம் போன்றவை எப்படி உருவானது? அதனை எப்படி கையாளுவது? என்று நாம் அறிந்து கொள்ளவும் அதனை சரியான முறையில் வழிநடத்தவும் கலைகள் நமக்குப் பெரிதும் துணை புரிகின்றது.

எடுத்துக்காட்டாக:

கம்பராமாயணத்தில் தலைவனான இராமன் அறச்செயல்கள், பெற்றோரை மதித்தல், சகோதரர்களின் ஒற்றுமை, நல்லாட்சி, ஒருவனுக்கு ஒருத்தி போன்ற நற்குணங்களை மக்களிடத்திலும் கொண்டு சேர்ப்பவை நம் கலைகள்.

சீதா கல்யாணத்தில் வில்லை வளைத்து நாண் ஏற்றினால் சீதையை மணம்புரியலாம் என ஜனகர் கூற இராமன் வில்லை வளைத்து, நாண் ஏற்றி, வில்லை ஒடித்தவுடன் தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். ''என் உயிரை விட பிரியமான சீதையை இராமனுக்குத் தந்தேன்'' என்ற ஜனகர் கூறி ''இதோ என் மகள்! நீ செல்லும் தருமநெறியில் இவள் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்து பெற்றுக் கொள்ளலாம் மங்களம் ஆகுக கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள் ,விட்டுப் பிரிய மாட்டாள்'' என்று கூறுவதன் வாயிலாக திருமண உறவின் மேன்மை புலப்படுகிறது.

இயம்ஸீதா மம ஸீதா
ஸஹ தர்மசரீ தவ
ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே
பாணிமா க்ருண்ணீஷ்வ பாணீநா
பதிவ்ரதா மஹா பாகா
சாயா இவானுகதா ஸதா [1]

வடநாட்டில் நடைபெறும் விவாகங்களிலும் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் போது சீதா கல்யாண மந்திரத்தை சொல்லி வருகின்றார்கள். இன்னும் இது தொடர்கிறது. கலைகள் மூலமாக மக்களுக்கு கலாச்சாரத்தை நினைவுபடுத்துகிறார்கள்.

அடுத்த தலைமுறைக்கும் இது கடத்தப்படுகிறது. 5000 ஆண்டுகளுக்கு முன் நடந்த திருமணப் பண்பாடுகளை அகநானூறு வாயிலாக நாம் அறிய நேர்கிறது. சங்கத் தமிழர்களின் திருமணம் எவ்வாறு நடைபெற்றது என்பதை பின்வரும் பாடல் காட்டுகிறது

''உளுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப.......'' [2]

என்னும் அகநானூற்றுப் பாடலின் வழி அறிகின்றோம்.

திருமண விருந்தும், திருமண நிகழ்வும் மணமகள் அழைப்பு, மகளிர் வாழ்த்து, தனியறை புகுதல், இருவரும் மகிழ்தல் போன்ற சடங்குகள் பண்பாடுகள் போன்றவற்றை விளக்கமாக இப்பாடல் எடுத்துக் கூறுகிறது . இலக்கியங்களில் மறைந்துள்ள பண்பாட்டுக் கூறுகளை இன்று கலைகள் வழியாகக் கடத்தி, இளம் தலைமுறைக்கு கொண்டு சேர்க்கின்றனர் நம் கலைஞர்கள்.

தோல்பாவைக் கூத்தின் மூலம் அறியலாகும் உளவியல் வெளிப்பாடுகள்:

கலை அதாவது நாட்டுப்புறக் கலை வடிவங்கள் உளவியல் ரீதியாக மக்கள் மனதில் பதிந்துள்ளது. தோல்பாவைக் கூத்து சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பும் வகையில் அமைந்துள்ளது. நகைச்சுவை, அறக்கருத்துகள், நற்செய்திகள்,காதல், தெளிவான உரையாடல் என குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை அனைவரும் இரசிக்கும் வகையில் அமைந்துள்ளது.

கலைகள் குழந்தைகள் மனதில் ஆழமாகப் பதிவதால், தங்களையே அதற்குள் கொண்டு செல்கின்றார்கள். காட்சிகள் மூலம் காண்பதால் எளிதில் அனைத்து விதமான செயல்களையும் சொற்களையும் கற்றுக் கொள்கின்றார்கள்.

''ஹர்லாக்'' என்பவர்

''சமூக வளர்ச்சி என்பது சமூகத் தொடர்புகளில் முதிர்ச்சி பெறுதல்'' [3] என்று கூறுகிறார்.

அதாவது தான் வாழும் சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நல்லொழுக்க நெறிகள், முக்கியப் பண்பாட்டுக் கூறுகள் கற்று தனதாக்கிக் கொள்ளுதல் என்கின்ற உளவியல் கூற்றுக்கு ஏற்ப தோல்பாவைக் கூத்து காண்பதன் மூலம் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நல்லொழுக்க நெறிகளைக் கற்று மக்கள் தனதாக்கிக் கொள்கின்றனர். அதாவது ''நான்'' என்ற உணர்வைத் தாண்டி ''நாம்'' என்ற உணர்வோடு இயங்குதல், விட்டுக் கொடுத்தல், சகித்துக் கொள்ளுதல் தனது ஆர்வங்கள், தெரிவுகள் ஆகியவற்றைப் பெருக்கிக் கொள்ளுதல் ஆகியன இவற்றின் தொடர் விளைவுகள் ஆகும்.

''யூரி'' மற்றும் ''பிரன்பென்பிரன்னர்'' கூற்றின்படி

''சூழ்நிலைத் தொகுப்பு கோட்பாட்டின் அடிப்படையில்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் குழந்தைகள் அளவுக்கு அதிகமாக ஊறிப்போதல் போன்ற செயல்கள் மனித இடைவெளிகளைக் குறைத்திடும் அபாயத்தை ஏற்படுத்தும். இது போன்று இல்லாமல் கலை நிகழ்ச்சிகளை நேரில் பார்த்து கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு அனைவரும் ஒற்றுமையாக சமுதாய மேம்பட செயல்பட வேண்டும். கலை நிகழ்ச்சிகள் என்பது ஒற்றுமை, ஒருமைப்பாடு போன்றவற்றை மேம்படுத்தவும் அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லவும் பெரும் துணை புரிகிறது.

முடிவுரை:

காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப சமுதாயம் மாற்றமடைகிறது.இத்தகைய மாற்றத்திற்கு காரணமாக நாட்டுப்புற இலக்கியமும் புதிய புதிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது.நாட்டுப்புறக் கலைகள் மூலம் பல்வேறு பண்பாடுகள், காலச்சாரம் எவ்வாறு.அமைந்தன என்பதையும் அவை மக்களின் மனதில் எவ்வாறு தாக்கங்கள் பெற்றன என்பதையும் இக்கட்டுரை மூலம் அறிகிறோம்.

துணைநூற்பட்டியல்:


1. இராமாயணம்-சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார்-வானதி பதிப்பகம் -2010
2. E-book-TamilE-books.Orc அகநானூறு பாடல்-86
3. குழந்தைப் பருவமும் அதில் ஏற்படும் வளர்ச்சிகளும்- கி.நாகராஜன் -ஸ்ரீராம் பதிப்பகம்-2019


********* ********* ********** ********* ********* ********** ********** **********